

மகுடம்

# செல்லக் கண்ணே கேள்

கேணிப்பித்தன்

ச.அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லக் கண்ணே கேள்

## (சிறுவர் பாடல்கள்)

இந்நூல் எங்கள்
தந்தை அமரர். க.மதுரநாதன்,
தாயார் அமரர். ம.கமலபூசனி
ஆகியோரின் நினைவாக
அன்பளிப்புச் செய்கிறோம்.

பிள்ளைகள்

**கேணிப்பித்தன் ச. அருளானந்தம்**

**மகிடம்**

இல.90, பார்வீதி,
மட்டக்களப்பு 30000
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகுடம் பதிப்பக வெளியீடு - 56**

ISBN : 978-624-5849-26-0

நூல் : செல்லக் கண்ணே கேள் ● வகை : சிறுவர் பாடல் ● ஆசிரியர் : கேணிப்பித்தன் ச. அருளானந்தம் ● உரிமை : ஆசிரியருக்கு ● முதல் பதிப்பு : ஜூன் 2022 ● பக்கங்கள் - 40 ● வெளியீடு : மகுடம் பதிப்பகம் 90, பார்வீதி, மட்டக்களப்பு. 30000 ● தொ.பே. இல. 0774338878 ● அச்சு - வணசிங்க பிரிண்டர்ஸ், மட்டக்களப்பு. ● விலை : 400/=

*Book - Chella Kanne Kel ● Category - Children's song ● Author - Kenipiththan S. Arullanantham ● © Author ● First Edition - June 2022 ● Size - 1/8 ● Pages - 40 ● Published by - Magudam Publication. 90, Bar Road, Batticaloa. ● Ph.No. 0774338878 ● email - magudammichael@gmail.com ● Printing - Wanasinghe Printers, Batticaloa ● Price - 400/=*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்தலை மகன். கலை மகன் சான்றோன்

ஈன்றெடுத்த தாய்க்கும், தந்தைக்கும், தன் மாணவர்களுக்கும்,

ஆசிரியர்களுக்கும், எல்லோருக்கும் நல்லவராக

இவ்வுலகில் வாழ்ந்து காட்டிய என் மகன்

அருள்பாஸ்கரன் அவர்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்.

– ஆசிரியர் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கோணேசர் திருநடனம் | 1 |
| 2. | மலர்களில் பனித்துளி | 2 |
| 3. | வற்றிய குளத்தில் மீன் | 3 |
| 4. | செல்லக் கண்ணே கேள் | 4 |
| 5. | பொங்குவோம் வா | 5 |
| 6. | தெரிந்து கொள்வோம் | 6 |
| 7. | தேரேறி காளியாடி... | 7 |
| 8. | விடிகாலைப் பொழுது | 8 |
| 9. | இயக்கம் தொடக்கம் | 9 |
| 10. | வானில் தங்கத் தட்டு | 10 |
| 11. | மரத்திலே வீடு | 11 |
| 12. | வண்ணத்துப் பூச்சி | 12 |
| 13. | நிறுத்தியதா? | 13 |
| 14. | பட்டம் கட்டுவோம் | 14 |
| 15. | வாறார் வன்னியனார்! | 15 |
| 16. | பலசாலி | 16 |
| 17. | கறையான் | 17 |
| 18. | நமது பூமி | 18 |
| 19. | தாவரம் | 19 |
| 20. | ஏன்... ஏன்? | 21 |
| 21. | உலக நியதி | 22 |
| 22. | அதிசயமே | 23 |
| 23. | உறங்கும் முறை | 24 |
| 24. | நவராத்திரி | 25 |
| 25. | பட்டம் விடுவோம் | 26 |
| 26. | புகழ் பாடுவோம் | 27 |
| 27. | வளியின் வலிமை | 28 |
| 28. | வெப்பத்தின் செயல் | 29 |
| 29. | காடு | 30 |
| 30. | தபால்காரர் | 31 |
| 31 . | முருகா கேக்கலையோ..? | 32 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

மகுடம் பதிப்பகத்தின் 56வது வெளியீடாக நாடறிந்த பிரபல கவிஞரும், எழுத்தாளருமான கலாபூஷணம். கேணிப்பித்தன் ச.அருளானந்தம் அவர்களின் **"செல்லக் கண்ணே கேள்"** என்ற இச்சிறுவர் பாடல் தொகுப்பை வெளியிடுவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

கேணிப்பித்தன் அவர்கள் திருகோணமலை ஆலங்கேணியைச் சேர்ந்தவர். ஐம்பது வருட காலத்திற்கு மேலாக எழுத்துத் துறையில் தடம் பதித்தவர். ஈழத்திலே இலக்கியத்துறையில் நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டு சாதனை புரிந்தவர்.

ஆங்கிலத்திலும் எழுதும் வல்லமை கொண்ட இவரது பத்துக்கு மேற்பட்ட ஆங்கில் நூல்களும் வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல், ஆய்வு என இலக்கியத்தின் அனைத்துத் தளங்களிலும் தனது முத்திரையை பதித்தவர். அதேவேளை சிறுவர் இலக்கியத்திலும் முப்பதுக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டு சாதனை புரிந்தவர்.

ஈழத்தின் சிறுவர் இலக்கிய முன்னோடிகளில் ஒருவராக திகழும் கவிஞர் கேணிப்பித்தன் அவர்களின் "செல்லக் கண்ணே கேள்" என்ற இச் சிறுவர் பாடல்கள் அறிவியல் ரீதியாகவும் பல செய்தியினை மாணவர்களுக்குச் சொல்கிறது. அழகிய எளிய தமிழில் மாணவர்கள் இசைகோர்த்து பாடக்கூடிய பாடல்களாக இவைகள் அமைந்துள்ளன.

இன்றும் இளமையுடன் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கும் கவிஞர் கேணிப்பித்தன் தொடர்ந்து படைக்க வேண்டும்.

வாழ்த்துகளுடன்

**மகுடம் வி. மைக்கல்கொலின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது உரை

கவிஞராக இருப்பது பெருமைக்குரியதே. அதைவிடப் பெருமை குழந்தைக் கவிஞராக இருப்பது ஒரு வரம். குழந்தைகள் உலகம் அரிதாரம் பூசாத அன்பு நிறைந்த பூந்தோட்டம். அதில் வண்டாகச் சுற்றி வந்து தேன் கவிதைகளைக் குழந்தை நெஞ்சங்களில் தெளிப்பது ஒரு கலை. சிறாருக்குக் கவிதை படைப்பது இறைவனுக்கு நைவேத்தியம் படைப்பது போன்றதாகும்.

சிறுவர் பாடல்களை எழுதும்போது 06 – 16 வயதினரைக் கவனத்திற் கொண்டு இப்பாடல்களை எழுதலானேன். சிறுவர் பாடல்கள் எனும்போது முதலாம் வகுப்புத் தொடக்கம் ஐந்தாம் வகுப்பினருக்கான நூல்கள்தான் என்று தப்பாக எடைபோட்டு விடுகிறார்கள். உண்மையில் சிறுவர் என்பவர்கள் 18வயது வரையுள்ள ஆண். பெண் இருசாராரையும் குறிக்கும் என ஐ.நா. அமையம் ஏற்றுக் கொண்டுள்ளது.

இதனை நமது முன்னோர் கருத்தில் கொண்டு பதினாறு வயதினோரையும் உள்ளடக்கிப் பிள்ளைத் தமிழ் என்ற இலக்கியவகையை ஆக்கித்தந்துள்ளனர். நமது விளையாட்டுப் பாடல்களைப் பாருங்கள். நமது விடலையர் அதாவது இளம்வட்டக் குழுவினர் **(Teen age)** கிட்டியும் புள்ளும் விளையாடுவதைக் கவனியுங்கள். அதில் ஆடுபவர்களைக் கவனியுங்கள். அவர்கள் சிறுவர் என்ற வரையறைக்குள் வந்து விடுகின்றனரா? அச்சிறுவர்கள் விளையாடும்போது கிராமங்களில் உள்ள இளைஞர்களும் பங்கு கொண்டு சிறப்பாக விளையாடுவதைக் கண்டு இன்புற்றிருக்கிறேன். நானும் விளையாடியிருக்கிறேன்.

சிறுவர்களுக்கு ஏற்ற பாடல்களை எழுதுவதும், அவர்களைப் படிக்கத் தூண்டுவதும் நமது தலையாய கடமையாகும். நமது சிறார்களின் போக்கைக் கவனியுங்கள். அவர்களது பருவம் மிகமுக்கியமானது. அறிவை வளர்க்க வேண்டியவர்களை அலையவைத்து அல்லலைத் தொலைக் காட்சிகளும். செல்போன்களும். 'இன்ரநெற்' போன்றனவும் தருகின்றன. இன்றைய சினிமாக்காட்சிகளும், நாடகங்களும், விளம்பரங்களும் சிறார் களைத் தம்பக்கம் இழுத்து அவலத்தைக் கொடுக்கின்றன. நல்லனவற்றைக் கொடுக்கும் இவை அல்லனவற்றையே அதிகம் கொடுக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களைச் சரியான பாதையில் இட்டுச் செல்லவேண்டியது பெற்றாரினதும், ஆசிரியர்களினதும் தலையாய கடமையாகின்றது. இயற்கையை இரசிக்கவும், அதன் எழிலினைக் கண்டு இன்புறவும் சிறார்களுக்கு வழிகாட்ட வேண்டும். இயற்கைதானே நமக்குச் சகலதையும் வழங்கும் களஞ்சியமாகும். இயற்கையைப் பார்க்கவும், அதனைப் போற்றவும் நமது சிறார்களை வழிப்படுத்த வேண்டும். வானத்தில் நிகழும் அற்புதக் காட்சிகளைக் கண்டு அவர்கள் மெய்மறக்கவும், மொழிவிருத்தியில் இட்டுச் செல்லவும் வழிப்படுத்துவது அனைத்துத் தரப்பினரும் உதவ வேண்டும். இந்நூலை வெறுமனே பரிசுக்காக எழுதவில்லை. நமது இளந் தலைமுறையினர் இயற்கையைப் போற்றுபவர்களாக இருக்க வேண்டும்.

சகல சமய, சமூக நிறுவனங்களும், பெரியவர்களும் இவற்றுக்கு உறுதுணையாக இருந்து நல்வழிப் படுத்தவேண்டும். அவர்களை நல்லனவற்றைப் படிக்கவும், சுயமாகச் சிந்திக்கவும், நல்ல பழக்க வழக்கங்களைப் பின்பற்ற வைப்பதற்குப் பாடுபட வேண்டும்..

சிறுவர் இலக்கியம் பற்றிய சிந்தனையாளர்கள் இவற்றைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் பரிசுகள் பெற வேண்டும் என்பதற்காக எழுதுவதில்லை. நமது சிறுவர்களைச் சிந்திக்க வைப்பதற்காகவே எழுதுகிறேன். இவ்வகை இலக்கியங்களை பெற்றோரும், ஆசிரியர்களும் நமது சிறார்களுக்கு அறிமுகம் செய்து வாங்கிக் கொடுத்து ஊக்கப்படுத்த வேண்டும்.

இளம் வயதில் கற்றுக்கொள்ளும் நற்பழக்க வழக்கங்கள் வாழ்க்கை பூராவும் தொடரும் என்பது கல்வியியலாளர்களது ஏகோபித்த கூற்றாகும். ஆதலால் இச்செயற்பாட்டினை பெற்றோரும், ஆசிரியர்களும் முன்னெடுக்க வேண்டும். நாங்கள் பிள்ளைகளுக்குச் சிறந்த வழிகாட்டல்களைச் செய்யத் தவறினால் அதன் எதிர் மாறான பிரதிபலிப்புக்களைத்தான் காணமுடியும். நல்ல சமூகத்தை உருவாக்கவும், சிந்திக்கவைக்கும் ஆற்றலை மாணவர்களிடம் ஏற்படுத்தவும் வேண்டும்.

அண்மையில் முதலாம் வகுப்பு ஆசிரியர் முன்பள்ளியில் இருந்து ஆசிரியர் அரவணைப்பில் கல்வி கற்ற பிள்ளை அதே அரவணைப்புக் கிடைக்குமென்று எதிர்பார்த்து வகுப்பில் இருந்தது. அந்த வகுப்பு ஆசிரியர் பிள்ளையை வகுப்புக்கு வெளியே நிறுத்தி விட்டிருக்கிறார். அந்தப்பிள்ளை கண்கலங்கி அழுதவண்ணம் வந்தார். ஆசிரியர்கள் பிள்ளைகளை முதலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கவேண்டும். பின் பாடத்திட்டத்தைப் படிக்கவேண்டும். பிள்ளைகளைப் படித்தால்தான் பாடத்திட்டத்தோடு இணைத்துக் கற்பிக்கலாம். சிறந்த மாணவர்களை உருவாக்கலாம். இது நான் சொல்லவில்லை அனைத்துக் கல்வியியலாளர்களும் கூறியுள்ளார்கள்.

கற்றல் செயற்பாடுகள் ஆடல் பாடல் நிறைந்த கல்யாண மண்டபமாக இருக்கவேண்டும். அதற்கேற்ற பாடல்களை இந்த நூலில் இணைத்துள்ளேன். வேண்டும்போது வேண்டிய பாடலையும் சேர்த்துக் கற்பித்து ஆடச் செய்யுங்கள். கற்பித்தல் சிறப்பாக அமையும்.

இவ்வாறான பாடல்களை பாடத்திட்டத்தினுள் புகுத்தி மாணவர் களுக்கு இயற்கையின் இரகசியங்களை அறியச்செய்ய வேண்டும். பல்வகையான சிறுவர் பாடல்களைக் கலந்து இந்நூலில் புகுத்தியுள்ளேன். சிறுவருக்கு இவற்றை அறிமுகம் செய்து சிந்திக்க வையுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். இந் நூலாக்கத்துக்கு உறுதுணையாக நின்று வெளிவர உதவிய கவிஞர் மைக்கல் கொலின் என்றும் நன்றிக்குரியவர். மகுடம் பதிப்பகத்தாருக்கும் நன்றி.

நன்றியுடன்...

**கேணிப்பித்தன் ச. அருளானந்தம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. கோணேசர் திருநடனம்

தந்தன தானா தந்தன தானா தானதந்தானே
தந்தன தானா தந்தன தானா தானதந்தானே
தந்தன தானா தந்தன தானா தானதந்தானே
தந்தன தானா தந்தன தானா தானதந்தானே

கோணை நாதன் தோற்றத்தைப் பாருங்கடிஅவன்
கழலின் ஓசைநயமதை இரசித்துக் கேளுங்கடி
கொலுவீற்றி ருக்கும் அழகைப் பாடுங்கடி நம்
கோணேசன் திருப்புகழை பாடுவோம் வாருங்கடி

கோணேசர் திருச்சடையில் கங்கை அணிந்தான்
கழுத்தைச் சுற்றி யொருபாம்பைப் புனைந்தான்
கோணேசர் எடுத்த பொற்பாதத்தை காணுவமடி
கோலமதைப் பாடியாடி எல்லோரும் மகிழ்வோமடி



கோணேசர் குனித்த புருவத்தைப் பாருங்கடியவர்
கொவ்வைச் செவ்வாய்குமின் சிரிப்பின் பொலிவை
பனித்த சடையில் சூடிய கங்கையின் வீழ்ச்சியை
பாதமலைநின்று பார்க்கக்கண்கள்நூறுபோதாதடி

தூம்பறை ஊடாக பாய்ந்து வந்து கோணஈசன்
தாண்டவம் காணவே ஆடிவந்து இராவணனீசன்
கம்பீரமாகத் தோள் கொடுத்துத் கிளப்பியபாறை
காலா காலமாக தின்னற் செயலுக்கு ஆட்படுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2. மலர்களில் பனித்துளி

மல்லிகை மலர்களால் மாலைதொடுத்து
மலர்களின் மின்னும் பனித்துளி சேர்த்து!
மெல்லிய இதழ்களில் தூங்கிடும் துளிகளில்
ஏழு நிறங்கள் மின்னுவது பரிதியின் சோதியடி

வானம் எங்குமே நீலம் பூசியதும் இடையில்
மந்தார நிறமாய் மாற்றிய ஓவியன்யாரோ
ஞானக் கூத்தன் திருவிளை யாடலாமோ
மழைத் தூறலாய் தூறுவ தேனோடியோ?

சூரியக் குஞ்சு புறப்படும் கிழக்கில்
சூழ்ந்த இருளும் விலகி யோடிடும்
வீரிய முள்ள ரோஜா மலர்ச்செடி
விரிந்த மலர்கள் சுமந்து சிலிர்ப்பதேன்?

வண்டினம் வந்து பாடிப் பறப்பதேன்?
வண்ண நிறங்களில் பூக்கள் மலர்வதேன்?
தண்மணம் பரந்து காற்றில் விடுவதேன்?
சாமி செயலிது ஜனனம் என்பதாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. வற்றிய குளத்தில் மீன்

பருவக் காற்று தணிந்து நின்றது நிலம்
பாளம் பாளமாய் பிளந்து கிடந்தது
அரவம் அற்ற குளமெங்கும் அமைதி
அகன்று விரிந்து பரவிக் கிடந்தது

உணவு தேடும் மனிதர்கள் எங்கும்
உற்றுப் பார்த்து கவனமாய் தேடினர்.
கணமே நின்று எட்டிப் பார்த்தவர் அங்கு
கண்ணில் பட்டதைக் கண்டுகொண்டனர்!

பிளந்த நிலத் துண்டங்கள் கைகளால்
பிய்த்துப் பிய்த்துப் பக்கம் போட்டனர்
அளந்து அளவாய் உடைத்து தடியை
அதற்குள் விட்டுக் குடைந்து பார்த்தனர்.

மண்ணுள் மறைந்து கிடந்த மீன்களும்
மேலே துள்ளிப் பாய்ந்து வந்து விழுந்தன
கண்ணி மைக்கு முன்னரே பல மீன்களை
கணக்குப் பார்த்துப் பையில் போட்டனர்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. செல்லக் கண்ணே கேள்

நானும் நீயும் கண்ணிமைப்போம்
செல்லக் கண்ணே கேளு!
மீனும் பாம்பும் இமையா திருக்கும்
செல்லக் கண்ணே கேளு!

மானும் மரையும் விலங்குகள் யாவும்
விழியை மூடி நித்திரை கொள்ளும்
மீனும் பாம்பும் விழிமூடா துறங்கும்
விழிகளை மூட இமைகள் இல்லை!

செல்லக் கண்ணே கேளு - என்
செல்லக் கண்ணே கேளு!

மண்ணுள் மறைந்து வாழும் தவளை
மகிழ்ந்து தத்தும் பாய்ந்து திரியும்
தண்ணீர் நிலத்தில் பரவி ஓடினால்
தாளம் மேளம் கச்சேரி முழங்கும்

செல்லக் கண்ணே கேளு - என்
செல்லக் கண்ணே கேளு

கூவும் குயில்கள் கூடு கட்டாதாம்
காகக் கூட்டில் முட்டை இடுமாம்
பாவம் காகம் அடையும் காக்குமாம்
பாசம் குஞ்சுக்கு இரையும் ஊட்டும்.

செல்லக் கண்ணே கேளு - என்
செல்லக் கண்ணே கேளு!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. பொங்குவோம் வா

சின்ன வண்ணக் கண்ணழகா!
சிரிப்பால் மயக்கும் ஆணழகா!
சின்னக் கையால் அரிசையள்ளப்பா
சிரித்துப் பானையுள் போடப்பா!

பக்கம் வந்து ஆடப்பா
பாடி அம்மாவுடன் நில்லடா
சொக்க வைக்கும் செல்வம் நீயட
சொர்க்கம் நீயே பக்கம் நில்லடா!

தோள் அழகை என்னென் பேன்?
துடித்து துள்ளும் சிரிப்போ தேன்
கள்ளம் அற்ற இதயத் தோனே!
கட்டழகு மலர் விழியோனே!

சின்னப் பிஞ்சு ஐந்து விரல்களும்
சிறிய வண்ணக் கண்களும்
பின்னும் மழலை கவிதையும்
பித்தன் ஆக்கி விட்டதடா!

வா வா மகனே விரைந்தோடி
வந்தே மடியில் சாய்ந்து கொள்!
வாழ வைக்க வந்தவனே
வா மகனே வா வா வா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. தெரிந்து கொள்வோம்

காலையில் சூரியன் சிவந்து உதிக்கிறது - அது
காலந் தாழ்த்தி உதித்த துண்டா?
மாலையில் மேற்கே சிவந்து மறைகிறது - அது
வேறு திசையில் மறைந்த துண்டா?

பூமியும் தனக்கென வழியை அமைத்து - வருசம்
பூராச் சுழன்று வருவதைப் பாரத்தாயா!
பூமியும் சுழல்வதை நிறுத்திய துண்டா? - இல்லை
பூமியில் இராப்பகல் மாறிய துண்டா?

சந்திரன் தேய்ந்து வளர்வதைப் பார்த்தாயா - அது
தண்ணொளி தந்து ஒளிர்வதைப் பார்த்தாயா?
அந்தரக் கோள்கள் அசைவதைக் கண்டாயா-அவை
அதனதன் வழியில் செல்வதைப் பார்த்தாயா?

உனக்கொரு கடமை உலகில் உண்டு - அதை
உணர்ந்து செய்து முடித்து விடுதம்பி
எனக்கொரு தம்பி உலகில் இருக்கின்றான் - அவன் அழகாய்
செய்தே முடிப்பான் என்று இருப்பேனே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. தேரேறி காளியாடி...

தாம் தரிகிட தாம் தரிகிட - தாம்
தாம் தரிகிட தாம் தரிகிட - தாம்

தேரேறி காளியாடி வருகிறார் - தோழியரே
திருக் கோலம் பார்ப்போம் வாருங்கள்
தேரோடும் தெருவெங்கும் மாவிலை - கட்டி
தோரணம் கும்பங்கள் வைப்போமடி

திருப் பள்ளி எழுச்சி பாடுவோம் - அவள்
திருப்பாதம் தொழுதெழுவோம் வாருங்கள்
திருப்பாற் கடலில் வந்தவிஷத்தை - சிவன்
தொண்டை விழுங்காது காத்தாராம்

நீலகண்டனாய் பேர்பெற்ற ஈசனை - பாடி
கோலாடுவோம் வாருங்கள் தோழியரே
கோலங்கள் போடுவோம் தீபங்கள் - காட்டி
கொண்டாடி மகிழ்வோம் தோழியரே!

தேவி கோணேசர் சமேதரராய் வாறாராம் - தெருவில்
தேரிலே திருக் காட்சி தருவாராம்!
காவிய நாயகன் கோணேசரை - புகழ்ந்து
காவியம் படைப்போம் வாருங்கடி!

தாம் தரிகிட தாம் தரிகிட - தாம்
தாம் தரிகிட தாம் தரிகிட தாம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. விடிகாலைப் பொழுது

கீழ்திசை வானில் சூரியன் வந்தனன்
காரிருள் விரைந்து கலைந்து ஓடுது
வீழ்ந்திடும் பனித்துளி எங்கோ மறைந்தது
விடிந்து வெளியெங்கும் புள்ளினம் ஆர்த்தன

தூக்கணாங் குருவிகள் சுற்றிப் பறந்தன
சீட்டி யடித்துமே மகிழ்ந்து சிறகடித்தன!
பாக்குப் போன்ற சின்னக் குருவிகள்
பற்றைக்குள் பாய்ந்து பாய்ந்து துள்ளின!


மெல்லிய காற்று வீசத் தொடங்கிற்று
மெல்லிசை பரப்பிப் பாடி மகிழ்ந்தன
துல்லிய ஒளியில் சோடியாய் பாடின!
தமிழிசை சரிகம பதநி போல் இசைத்தன!

கிழிந்து இருளெலாம் ஓடி மறைந்தன
வீழ்ந்திடு பனித்துளி பூவிதழ் வழிந்தன
பிழிந்த தேறலை வண்டினம் தேடிச் சுற்றின
புரண்டு புரண்டு சுழன்று மாந்தி மயங்கின!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 9. இயக்கம் தொடக்கம்

நீர்நிலை மீது சூரிய கதிர்கள் கவிழ்ந்தன
நிமிர்ந்த மொட்டுக்கள் இதழ்விரித்தன
பார்மிசை இயக்கம் பரவத் தொடங்கின
பகலவன் வானில் பவனி வந்தனன்.


ஆவி யாக்கம் புவியெங்கும் பரவின
ஆக்கச் செயலால் புவிஇயக்கம் பெற்றது
கூவிக் குயிலினம் பாடிப்பறந்து களித்தன
கூத்து உலகிலே ஆடிக் களித்தது

கால மாற்றங்கள் சுழன்று மாறின
காற்றும் மழையும் மாறி வந்தன
சீலம் எங்கும் செல்வம் விளைந்தது
சிறந்த மானிடர் எங்கும் நிறைந்தனர்.

பாட்டும் பரதமும் பாரெங்கும் விரிந்தன!
பள்ளிகள் தோறும் புலமை பெற்றன!
மேட்டு நிலங்களும் விளைச்சல் கண்டன
பஞ்சம் நீங்கியே மக்கள் மகிழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 10. வானில் தங்கத் தட்டு

களைத்த பரிதியும் மேற்கே திரும்பினன்
காய்ந்த தாவரம் சோர்வுடன் மேற்கின்
மலைத் தொடர் சரிகையால் சோடித்து
மஞ்சள் பூசிய குங்குமம் கலந்ததாரோ

வானில் இருளும் தெரியுதே தங்கத் தட்டு
வண்ணம் தந்திடும் தங்கப் பொட்டு
கூனி வளைந்தொரு நாள் தெரியும்
கொள்ளை அழகு பொலிந்து விசிறும்!

நீலவான் பரப்பில் வெளிச்சம் சொட்டும்
நிலவுடன் சேர்ந்து விண்மீன் நீந்தும்
பால்வெளி எங்கும் பரந்து விரியும்
பகலாய்க் குளிர் ஒளி பாய்ந்து வீசும்!

காதலைக் கவிஞர் பேனாவில் அடைப்பார்
காகிதத் தாளில் தொடுத்து எழுதுவார்
பூவிதழ் விரிந்து புன்னகை மலரும்
பூக்களாய் சொரிந்து காவியம் விரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. மரத்திலே வீடு

மரங்கொத்தி மாமா மேளந் தட்டுவார்
செல்லக் கண்ணே கேளு!
கிளி மைனாக்கு வீடமைப்பார்
செல்லக் கண்ணே கேளு!

இரவானால் ஆந்தையும் கோட்டானும்
இரைதேடி வயிற்றை நிரப்புவார்!
இருள்விலகு முன்னே விழியை மூடுவார்!
கேளு கண்ணே கேளு!

மண்ணுள் மறைந்து வாழும் தவளை
மகிழ்ந்து தத்தும் பாய்ந்து திரியும்
தண்ணீர் நிலத்தில் பரவி ஓடினால்
தாளம் மேளம் கச்சேரி முழங்கும்

செல்லக் கண்ணே கேளு - என்
செல்லக் கண்ணே கேளு

கூவும் குயில்கள் கூடு கட்டாதாம்
காகக் கூட்டில் முட்டை இடுமாம்
பாவம் காகம் அடையும் காக்குமாம்
பாசம் குஞ்சுக்கு இரையும் ஊட்டுமாம்

செல்லக் கண்ணே கேளு - என்
செல்லக் கண்ணே கேளு!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. வண்ணத்துப் பூச்சி

கண்ணைக் கவரும் அழகுச் செட்டை
கடவுள் தந்த தேன் சொல்வாய்
வண்ணப் பூவில்  சுரக்கும் தேனை
வயிற்றில் நிரப்பிக் கொள்ளவே!

தேன் குடிக்கத் தோட்டம் தேடி
சிறகடித்து வருகிறாய் பூவின்
தேன் குடிக்க வாயேயில்லை
வயிற்றில் நிரப்பிக்கொள்வ தெப்படி?

ஓசை யின்றி மெல்லப் பறந்து
ஒவ்வொரு பூவாய் மொய்க்கிறாய்
ஆசையால் உன்னை அழைக்கிறேன்
அமர்வாய் மெல்ல என் கைவிரல்களில்

மணம் கொண்ட வாசம் இல்லை தேறல்
வந்து சுரப்பதும் விரலில் இல்லை!
மனதை ஈர்க்க வழியில்லையே சின்ன வயிறும்
நிறைய மார்க்கம் இல்லை விடுபோகிறேன்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. நிறுத்தியதா?

மாலையில் சந்திரன் உதிக்கிறது - அது
வடிவம் மாற்றி உதிப்பதைப் பார்!
மாலையில் மேற்கே மறைகிறது - அது
வேறு திசையில் மறைவதில்லை!

பூமியும் தனக்கென வழியமைத்து - வருசம்
பூராச் சுழன்று வருவதைப் பார்!
பூமியும் சுழல்வதை நிறுத்தியதா? - இல்லை
பூமியில் இராப்பகல் மாறியதா?

சந்திரன் தேய்ந்து வளர்வதைப் பார் - அது
தண்ணொளி தந்து ஒளிர்வதைப் பார்
அந்தரக் கோள்கள் அசைவதைப் பார் - அவை
அதனதன் வழியில் செல்வதைப்பார்!

உனக்கொரு கடமை உலகிலுண்டு - அதை
உணர்ந்து செய்து முடிதம்பி
எனக்கொரு தம்பி இருக்கின்றான் - என்று
எண்ணி அழகாகச் செய்தம்பி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. பட்டம் கட்டுவோம்

பட்டம் பல கட்டுவோம்
பறக்க விட்டுக் காட்டுவோம்
எட்டு மூலை பட்டங்கள்
ஏற்றி விளை யாடுவோம்

வண்ணத் தாளை வெட்டுவோம்
வெட்டி அளவாய் ஒட்டுவோம்
கண்ணைப் பறிக்கும் நிறத்திலே
கட்டிப் பட்டம் ஏற்றுவோம்

மயிலைப் போன்ற பட்டமாம்
மைனா வடிவில் பட்டமாம்
குயிலைப் போன்று வானிலே
கூவும் பட்டம் ஏற்றுவோம்.

பென்னம் பெரிய பட்டங்கள்
றோபோ உருவில் பட்டங்கள்
கண்ணைப் பறிக்கும் வகையிலே
காற்றில் பறந்து காட்டுது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. வாறார் வன்னியனார்!

எங்கள் ஊரைச் சுற்றி ஓடும்
உப்பு நீர் சிறாற்று பலவுண்டு
திங்கள் உதயம் கொள்வதறிந்து
திரிவோம் ஆற்றின் கரையோரம்!

ஏறுவெள்ளம் ஏறும் நேரம்
இறால் நண்டு மீன்வகைகள்
வீறுகொண்டு நீந்தி எடுப்பாய்
வன்னியனார் மெல்ல வருவார்.

பனை தென்னை ஓலைகளைச்
சூழாக நீளமாகக் கட்டுவோம்
இணைந்து இருவர் அவற்றை
எடுத்து ஆற்றுக்குச் செல்லுவோம்



எட்டுக் காலுான்றி அழகாய்
இருகால் படமெடுத்து வருவார்
இடம் வலமாக ஓடித்திரிவார்
எட்டி ஓடும் இறால் மீன்பிடிப்பார்

மெதுவாய் கால்களை நகர்த்தி
மெல்ல நடந்து சூழ்கையேந்தி
பதுங்கிப் மெல்ல நடந்து செல்வோம்
பதுமைகளாய் வேட்டை ஆடுவோம்

கெட்டியாய் பிடித்து கொடுக்கில் இறுக்கி
கொள்வார் நண்டுத்தம்பி அவர்க்கு தலையே
மொட்டைதலை மூளையே இல்லையாம்
சட்டையை கழற்றி மிதந்து வருவாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 16. பலசாலி

ஆற்றின் அடியில் முதலை நீரடி வீரன்
யானையை வீழ்த்தி இழுத்துச் செல்லுமாம்
சேற்றில் முளைத்து செந்தாமரை மலருமாம்
சிவப்பு ரோஜா தோட்டத்தில் வளருமாம்.

நாக்கு இல்லா முதலை கடித்து இரையை
நசுக்கிப் பற்களால் சப்பி விழுங்குமாம்.
நாக்கில் ஒட்டி இருக்கும் பசையால் நீட்டி
இரையை இழுத்துப் எடுக்குமாம் உணவை.

ஓட்டைச் சுமந்து நத்தை ஊர்ந்து வருவார்
ஓசை இன்றியே செவிட்டு பாம்பு நெளிவார்
சேட்டை இல்லாது ஆமை ஊர்ந்து வருவார்
ஓட்டில் முடியே இல்லை நாலுகாலால் நடப்பார்!

தத்தித் திரியும் தவளைத் தம்பிக்குக் கழுத்து
சுத்தமாக இல்லை கவலையின்றியே தத்தித்
தத்தித் தத்தி இராகம் பாடுமாம் தவளைக் கூட்டம்
தாளம் தவறாது இசைக்கோலம் சங்கீதம் எழும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. கறையான்

நிலத்தில் கீழுள்ள மண்ணை எடுப்பான்
நினைத்தவாறு அழகு அடுக்குமாளிகை
எழுப்பிக் கட்டுவான் அறைகள் பலதை
அழகாய் அமைப்பான் அவன் தேவதச்சன்

வயிறே இல்லை உழைப்பதில் சூரன்
வைக்கும் பொருளை அரித்தே அழிப்பதில்
பயில்வான் பரமனின் படைப்பில் சிறியவன்
புற்று அடியில் கிண்டத் தண்ணீர் கிடைக்கும்

கறையான் தம்பிக்கு வயிறே இல்லை
சாப்பிடும் உணவு எங்கே போகும் அதிசயமே
சிறகு முளைத்து பறந்து ஈசல் ஆகிவெளிவரும்
தூறல் மழைக் கண்டால் வீரனாய் வெளிவரும்

உடும்புத் தம்பிக்கு பெருங் கொண்டாட்டம் புற்றை
உற்றுப் பார்த்துத் தயாராய் ஈசலைப் பிடித்து உண்ண
கடுந்தவம் வேட்டையாட உடும்பில் கவனம் இருக்கும்
உடும்பைப் பிடித்து வேட்டை நாய்கள் வேட்டையாடும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18. நமது பூமி

நமது பூமியில் என்னஇல்லை
நமக்கு வேண்டிய அனைத்தையுமே
நமக்காய் இறைவன் வைத்துள்ளான்
நாம்தான் அதனைப் புரியவில்லை

தட்டிப் பார்த்தால் தங்கம்வரும்
தகரம் செம்பு கனியவளம்
எட்டி இடித்தால் இரும்புவரும்
ஈர்க்கும் காந்தம் துருவங்களில்

ஓடும் பொறியை இயக்கவல்ல
ஒருபொருள் நிலநெய் ஒளிந்துளது
பாடும் காற்றின் வலிமையினைப்
பாய்மரக் கப்பலில் பார்த்திடலாம்

அலைகடல் மடியின் அடியினிலே
ஆயிரம் கோடி உயிரினங்கள்
விலைமதிப் பில்லா ரத்தினங்கள்
விளைந்து கிடக்கும் விளைநிலமாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19. தாவரம்

தாவரம் பூமியில் வளர்கிறது - அதற்கு
தண்ணீர் உணவு கொடுக்கிறது!.
தாவும் மந்தி அணில் பறவைகளும் - மகிழ்வுடன்
தேடி வந்து கூடு வைக்கும்!

கூவுங் கருங் குயில் கிளை அமர்ந்து - கூவி
கதிரவன் வருகைக்கு இசையமைக்கும்
காவெங்கும் பறவைகள் பறையறைந்து - பாடிக்
குலாவி மகிழ்ந்து கூத்தடிக்கும்

மலையில் மரஞ்செடிகள் வாழ்வதற்கு - மலையும்
மண்வளம் அளித்து வாழ்வளிக்கும்.
சிலைவடிக்கக் கல்லெடுக்க மலை - மகிழ்ந்து
கல்லை வெளியே தள்ளும்.

உயர்மலை யிலிருந்து வழிந்துவரும் - நீரை
ஊர்ந்துவர வரவேற்று கிளையாக்கி
அயலில் செல்வதைப் பார்த்திருக்கும் - தலையருவி
ஆனந்தக் கூத்தாடி துள்ளிப் பாய்ந்தோடும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. ஏன்... ஏன்?

காலையில் சூரியன் உதிக்கிறது
கவிழ்ந்த இருளெலாம் ஒளிக்கிறது
மாலையில் சந்திரன் வருகிறது
வானில் விண்மீன் ஒளிர்கிறது

பகலில் சூடாய் இருப்பதுமேன்
படரும் சந்திரன் குளிர்வதுமேன்?
பகலில் விண்மீன் எங்குளதோ?
படர்ந்த இருளும் மறைவதுமேன்?

கடல் நீர்வற்றிப் பெருகுவதேன்
காற்றும் சுழன்று வீசுவதேன்
படகு நீரில் மிதப்பதுமேன்
பாயை விரிக்க விரைவதுமேன்

வானில் மேகம் அசைவதுமேன்
மோதி மின்னல் படர்வதுமேன்?
தானாய் நீர்த்துளி நிலைமாறி
தாரை மழையாய் பொழிவதுமேன்?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21. உலக நியதி

உலகில் உள்ள பொருள்யாவும்
உண்மையில் மூன்று நிலைகாணும்
சிலது திண்மம் நிலையிலுண்டாம்
திரவம் வாயு எனப் பகுப்பர்.

திண்மம் உடைந்து துகளாகும்
திரவம் குளிர்ந்து உருமாறும்
திண்ம வடிவம்தான் கொள்ளும்
சூடு கண்டால் திரவமாகும்

திரவம் சூட்டைப் பெற்றுவிட்டால்
சிதைந்து ஆவியாய் மாறியெழும்
அரவமின்றி வான் வெளியில்
அலைந்து திரண்டு முகிலாகும்

முகில்கள் சேர்ந்து திரண்முகிலாய்
மாறி முற்றிக் குளிர்கொள்ளும்
முகிழ்த்து மின்சூழ் கருக்கட்டும்
மயிரிழைத் தூறலாய் மாறிவிடும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22. அதிசயமே

பூமிப் பந்தில் நிற்கின்றோம்
பரந்து வான்வெளி கிடக்கிறது
பூமிப் பந்தைச் சூழ்ந்துவளி
போர்த்து மூடிக் காக்கிறது.

வளியில் ஆயிரம் கலவையுண்டு
வாயுக் கலவை அணுத்திரளும்
அலையும் தூசி துணிக்கைகளும்
ஆயிரம் கோடி வளியிலுண்டு

சூரிய கதிரலை ஊடறுத்து
சூட்டைப் பரப்பி ஒளியேற்றும்
பாரிய இயக்கம் புவிகொள்ளும்
பகலவன் செயலால் உயிரவாழும்

வளியின் சமநிலை கலைந்துவிட்டால்
வாழ்க்கை வட்டம் நிகழாதாம்
வளியினைத் தூய்மைப் படுத்துங்கள்
சுகமாய் உயிரினம் வாழ்வதற்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23. உறங்கும் முறை

ஒவ்வொரு உயிரும் ஒவ்வொரு முறையில்
ஒதுங்கி ஓய்வாய் ஓரிடம் உறங்கும்
வௌவால் மரம் குகை கிளைகளில்
தலை கீழாய் தொங்கியே உறங்கும்

உயிர்கள் யாவும் ஓயாது உழைத்தபின்
ஓய்வெடுக்கவே உறங்கிக் கொள்ளுமாம்
அயர்ந்து நிலத்தில் சிலது படுக்குமாம்
உயர்ந்த மரங்களில் சிலது உறங்குமாம்

பறவைகள் கூட்டிலும் கிளையிலும் உறங்கும்
பயங்கரக் காட்டு விலங்குகள் குகைகளில் வாழும்
ஒட்டகச் சிவிங்கி அதிசயப் பிறவி
நின்றவாறே உறக்கம் கொள்ளும்

ஆறறிவு மனிதன் உறங்குவதோ பலமுறையாகும்
அன்பை மறந்த மனிதராலே அகிலம்மாறிப்போச்சு
அறம் தொலைந்து மறம் மறைந்து தடுமாறலாச்சு
புறமும் கோளும் புவியை அழிக்க லாச்சு!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24. நவராத்திரி

சரிகம பதநி பாடுங்கடி - நம்
தேவியர் மூவரைப் போற்றுங்கடி
சிறுமியர் கூடியே ஆடுங்கடி - வீர
சக்தியைப் போற்றிப் பாடுங்கடி!

செல்வத்தைத் தந்து வாழ்வைக்கும் -அந்த
தேவி இலக்குமியை - வாழ்த்துங்கடி
வல்லமை தருவாள் எம்அன்னை - எமை
வாழந்திட வைப்பாள் நம்சக்தி

கல்வியின் தேவி கலைவாணி - ஞானம்
தந்திடும் அன்னையை புகழ்ந்தேத்தி
செல்வியை பாடியே துதித்தாடி - மகிழ்ந்து
கும்மி ஆடுவோம் தோழியரே!

பள்ளிகள் வீடுகள் தோறும் - தேவியர்
புகழ் பாடி கும்மிகள் கொட்டுங்கடி
அள்ளியே வரங்களைத் தருவாரடி - பெற்று
அன்பாக ஒன்றாகி வாழுவோமடி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25. பட்டம் விடுவோம்

எங்கள் பரந்த கடற்கரையிலே
பட்டம் விடும் போட்டியாம்
எங்கும் வானில் பட்டங்கள்
ஏறி இறங்கிப் பறக்குது.

வண்ண வண்ணப் பட்டங்கள்
வானில் ஆடிப் பறக்குது
எண்ணில் அடங்காச் சிறுவர்கள்
எங்கும் பரந்து ஓடுறார்

அன்னம் போன்ற பட்டங்கள்
அழகு மயில் பட்டங்கள்
வண்ணக் காட்சி காட்டுது
வந்திருந்து மக்கள் ரசிக்கிறார்.

ஆளுக் கொரு கையிலே
ஆடும் பட்டம் வானிலே
வால் தொலைத்த பட்டங்கள்
வட்டம் அடித்து சுழலுது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26. புகழ் பாடுவோம்

கீழ்திசை வானின் அழகினைப் பாருங்கள்
கிளம்பிடும் சூரியக் குஞ்சை தேடுங்கள்
கிழக்கிலங்கை தலைநகரை பாருங்கள்
திருநடமாடும் கோணஈசனைப் போற்றுங்கள்

அலைகடல் இரைவதைச் சற்றுக் கேளுங்கள்
எழிசை எழுந்து சரிகம பதநி இரையும் கேளுங்கள்
புலமை யுடைய ஞானசம்பந்தன் அருளிய பதிகம்
பலநூறு ஆண்டுகள் வரலாறு கூறும் பாடுங்கள்

குரங்கினம் வந்து கூத்தாடும் மானினம் கூடும்
அரங்காடும் வானவர் பூமாரி தூவ மழைதூறும்
அரம்பயர் ஆட சிலம்பாடும் சேர்ந்து கழலோசை
கரையோரம் பரவ காற்றள்ளி எங்கும் பரப்பும்.

திருக்கோண மலையீசன் புகழ் பாடுவோம்
திக்கெட்டும் அவன் புகழோங்கி புவிவாழட்டும்
அருணகிரியார் திருப்புகழை நாமும் ஓதுவோம்
திருக்கோண மலைநாதன் தாழ் போற்றுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 27. வளியின் வலிமை

குளத்தின் நீரைக் குடத்தினுள்ளே
கொள்ள அமுக்கும் வேகத்தில்
குளத்து நீரும் குடத்தினுள்ளே
குபுகுபு குபுவென புகுந்துகொள்ளும்.

தண்ணீர போகும் வேகத்தில்
திரும்பும் வளியின் செயலதனால்
தண்ணீர் இரைந்து கொள்கிறதாம்
சத்தம் வந்தது தெரிந்துகொண்டேன்

குடத்தை மார்பில் அணைத்தபடி
குப்புற கவிழ்த்துப் பிடித்தபடி
குடத்தொடு குளத்தில் பாய்ந்தவுடன்
குடமே ஓடமாய் மிதக்குமப்பா.

வெற்றுக் குடத்துள் வளியிருந்து
வெளியே வரவழி இல்லையெனில்
வெற்றுக் குடத்துள் வளியிருந்து
விடாது நீரைத் தடுத்ததப்பா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28. வெப்பத்தின் செயல்



வெப்பம் ஏறப் பொருள்யாவும்
விரிந்து அளவில் பெரிதாகும்
வெப்பம் பெற்ற நீர்நிலைகள்
வெளியில் ஆவி தனைவிடுமாம்

நீரில் வெப்பம் ஏற்றிவிட்டால்
நீரா விசக்தி வெளியாகும்
பாரில் உள்ளோர் பயன்பெறுவார்
பலவித நன்மைகள் உருவாகும்

இடியப்பம் பிட்டு இட்லியும்
இனிக்கும் மோதகம் கொளுக்கட்டை
பிடிக்கும் தீன்வகை அவித்துவிடும்
பெருமை நீராவிக் குண்டேதான்.

அழுக்குத் துணியைச் சீராக்கி
அகற்றும் வெள்ளாவித் தொழிலாகும்
இழுத்து இரும்புத் தண்டவாளத்தில்
இரைந்து புகைவண்டி ஓடவைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29. காடு

தாம் தரிகிட தாம் தரிகிட
தாம் தரிகிட தாம்

பசுமை போர்த்திய காடு
பறவைகள் உறையும் கூடு
முசுறு மரங்களில் ஏறி இறங்கும்
இன்பம் பொங்கும் நம்நாடு

மரங்களும் பச்சை பூசியதோ
மலர்களும் நிறங்களும் பூசியதோ
சிறகினைக் கோதி சிலிர்த்து
சீட்டி அடிக்கும் குருவிகள்

பதுங்கிப் பாய்ந்து இரையைப்
பிடிக்கும் விலங்குகள் வாழும்
ஓதுக்குப் புறமான உலகம்
தக்கன பிழைக்கும் உலகம்.

இலைகளில் பச்சையம் முடிந்தால்
பழுத்த இலைகளாய் சருகுகள் ஆகும்
நிலத்தினில் விழுந்து மீண்டும் பசளையாகும்
மீள் சுழற்சி ஆகும் என்பது விதியாகும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 30. தபால்காரர்

அன்று எங்கள் ஊரெங்கும்
உலா வந்த தபால்காரர்
இன்று காண முடியவில்லை
இனிய மணியொலி கேட்கவில்லை

காக்கிச் சட்டை தொப்பியும்
கடிதம் சுமக்கும் செய்தியும்
தூககிச் சென்று தந்தவர்
சேவை எங்கோ போயிற்றோ?

பள்ளி செல்லும் பிள்ளைக்கும்
பாடம் சொல்லும் குருவுக்கும்
கல்விப் பரீட்சை முடிவுகளை
கொணர்ந்து தரும் புண்ணியவான்.

முகத்தில் ஒரு முறுவலும்
மனம் நிறைந்த வாழ்த்துகளும்
புகைச்சல் இல்லா மனதுடன்
வாழ்த்திச் செல்லும் தபால்காரர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31. முருகா கேக்கலையோ..?

முழக்கம் கேட்குது
முழக்கம் கேட்குது
முருகா கேக்கலையோ
முருகா கேக்கலையோ
கலக்கம் மனதை கலக்கி அமுக்குது
காது அடைக்கலையோ - உனது
காது அடைக்கலையோ?
முருகா கேக்கலையோ?

இலங்கை வேந்தன் இராவணன் சிரிப்பாய்
எங்கும் மின்னல் அடிக்குது
எங்கும் வானில் பரவுது
முருகா பார்க்கலையோ? - அதை
முருகா பார்க்கலையோ?
மின்னல் கொடியோ வானை மூடுது
முருகா பார்க்கலையோ? - அதை
முருகா பார்க்கலையோ?

சின்னக் கீற்றுக்கள்
சிதறிப் பறக்குது
முருகா பார்க்கலையோ? - அதை
முருகா பார்க்கலையோ?
சிரித்து வானம் பூத்துச் சிரிக்குது.
முருகா பார்க்கலையோ?
முருகா பார்க்கலையோ? - அதை
முருகா கேக்கலையோ?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32. கருக்கட்டல்

சிறிய விதையை நட்டுவிட்டால்
சிலநாட் கழிந்து முளைகொள்ளும்
பெரிய மரமாய் ஆகிப் பின்
பூத்துக் காய்த்து கனிதருமாம்.

பூவில் எப்படிக் காய்கள்வரும்
புதினம் இருக்கு யோசிப்போம்.
பூவினம் பற்பல நிறங்களிலே
பூத்து நிற்பதேன் புரிகிறதா?

மகரந்த மணிகள் பூவிலுண்டு
மதுரசத் தேனும் மலரிலுண்டு
மகரந்த மணிகளை வண்டுகளும்
வளியும் காவிச் செல்கிறதாம்

பூவிலும் ஆண்பெண் வகையுண்டு
புல்லிகள் உள்ளே சூழிருக்கும்
கூவிடும் வண்டின் உடல்மேலே
கூடிடும் மகரந்தம் நிறைந்திருக்கும்

காவிச் செல்லும் மகரந்தம்
காவின் வேறு பூக்களிலே
தாவிக் கருக்கட்டல் நிகழ்கிறதாம்
கற்பனை யல்ல உண்மையிது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் எங்கள்
தந்தை அமரர். க.மதுரநாதன்,
தாயார் அமரர். ம.கமலபூசனி
ஆகியோரின் நினைவாக
அன்பளிப்புச் செய்கிறோம்.

பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கேணிப்பித்தன் அவர்கள்
திருகோணமலை ஆலங்கேணியைச் சேர்ந்தவர்.
ஐம்பது வருட காலத்திற்கு மேலாக
எழுத்துத் துறையில் தடம் பதித்தவர்.
ஈழத்திலே இலக்கியத்துறையில் நூற்றுக்கு மேற்பட்ட
நூல்களை வெளியிட்டு இமாலய சாதனை புரிந்தவர்.
ஆங்கிலத்திலும் எழுதும் வல்லமை கொண்ட இவரது
பத்துக்கு மேற்பட்ட ஆங்கில நூல்களும்
வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.
கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல், ஆய்வு, என
இலக்கியத்தின் அனைத்துத் தளங்களிலும் தனது
முத்திரையை பதித்தவர். அதேவேளை சிறுவர்
இலக்கியத்திலும் முப்பதுக்கு மேற்பட்ட நூல்களை
வெளியிட்டு சாதனை புரிந்தவர்.

- மகுடம் வி. மைக்கல் கொலின்

மகுடம்
ISBN: 978-624-5849-26-0
9 786245 849260
400.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org